*இத்திட்டம் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் பெருந்துறை வரை பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் மற்றும் குளம்–குட்டைகளை நிரப்புவதற்கான ஒரு அருமையான திட்டம். எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதியைப் பெறாமலேயே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால், வறட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் பயன்பெறுவார்கள் என்ற அடிப்படையில், இத்திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு ரூ.1,862 கோடி. இருந்தாலும், இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு இந்த வருடம் நிதியை ஒதுக்காவிட்டாலும், மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கி, திட்டப் பணிகளைத் துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**147—**

### ஆய்வுக் கூடம்

***5289 திரு. எல். வெங்கடேசன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருக்கோவிலூர் தொகுதி, காரணை பெரிச்சானூர் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS

2012 ஏப்ரல் 23]

திருக்கோவிலூர் தொகுதி, காரணை பெரிச்சானூர் மேல்நிலைப் பள்ளிக்கு, நபார்டு வங்கி திட்டத்தில் ஆய்வுக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டித் தர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பள்ளி, 15–6–2009 ஆம் ஆண்டிலே மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது. அந்தப் பள்ளியில் 728 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அறிவியல் ஆய்வுக் கூடத்தைப் பொறுத்தவரையிலே, அந்த உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு ஆய்வுக் கூடம் மட்டும்தான் இருக்கிறது. அந்த ஆய்வுக் கூடம்தான் இப்பொழுதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய 4 பாடப் பிரிவுகளுக்கும் ஒரு ஆய்வுக் கூடம்தான் இருக்கிறது. எனவே, மேலும் 3 ஆய்வுக் கூடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அங்கு நான்கரை ஏக்கர் பரப்பளவு கொண்ட விளையாட்டு மைதானம் இருக்கிறது. சுமார் 1,000 மீட்டர் சுற்றளவுக் கொண்ட சுற்றுச் சுவர் அங்கே தேவை. இருந்தாலும், S.S.A. திட்டத்தின்கீழ் தற்போது 60 மீட்டர் வரை சுற்றுச் சுவர் போடப்படுகிறது. எனவே, அந்தத் திட்டத்தைத் துரிதமாக செய்து முடிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்த நிதியாண்டில் 48 சதவிகித நிதியை

அதிகமாக வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாகத் தமிழகத்தை ஆட்சி செய்தபோது, 2002 ஆம் ஆண்டிலேயே கல்வித் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகத்தான், நபார்டு வங்கியின்மூலம் கட்டடங்கள் மற்றும் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10—55*

இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், இப்போது மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், வருகின்ற கல்வியாண்டில், நபார்டு வங்கித் திட்டத்தில், அவர் கேட்டிருக்கின்றபடி கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**148—**

**கூடுதல் கட்டடம்**

***6788 திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்பகோணம் மாவட்ட அரசு மருத்துவமனை 402 படுக்கை வசதிகள் கொண்ட தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருவதோடு, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் புதிய படுக்கை வசதிகள் கொண்ட கட்டடங்கள் அங்கு கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. எனவே, புதிய கட்டடங்கள் கட்ட தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.